எஸ்.ஆர்.எம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம், சமூக மருத்துவத்துறை மற்றும் VHS MA Chidambaram Nursing College, இணைந்து 2023 பிப்ரவரி 07ம் தேதி, செவ்வாய் கிழமை அன்று சின்ன நீலாங்கரை, சமுதாய கூடத்தில் ஒரு மருத்துவ முகாமை நடத்தியது. அம்முகாமில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, மகப்பேறு நலம், குழந்தைகள் நலம் , கண் மருத்துவம், பேச்சு மொழி மற்றும் கேட்பியல் துறை, மக்கள் நல மருத்துவத்துறை, காது, மூக்கு, தொண்டை மருத்துவம் போன்ற துறைகளிலிருந்து மருத்துவர்கள் பங்கேற்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தனர். பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு பயனடைந்தனர். மேல் சிகிச்சை தேவைப்படுவோர் எஸ்.ஆர்.எம் மருத்துவமனைக்கு மஞ்சள் நிற பரிந்துரை அட்டையுடன், இலவச சிகிச்சைக்கு அனுப்பப்பட்டார்கள்.